REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 6உ வெள்ளி (20—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 7உ: சனி (21—5—55) [இதழ் 290

இருதார மணம்: ஆந்திர சர்க்கார் ஊழியருக்குத் தடை?

ஆந்திர சர்க்கார் ஊழியர்கள் இருதார மணம் செய்துகொள்வதைத் தடுக்கும் திட்டம் ஒன்றை சர்க்கார் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக முதன்மந்திரி கோபால ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

நெல்லூர் முஸ்லீம் சங்கம் தந்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறிய அவர், சர்க்கார் ஊழியத்தில் முகம்மதியர்களுக்கு மொழிப் பரீட்சையில் தேவையான விதிவிலக்குகள் தருவது பற்றியும் யோசித்துக்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

வட நாட்டுப் பார்ப்பனர் சாதிவெறி!

பிற சாதி விருந்தில் கலந்துகொண்ட பார்ப்பனரை 'சாதிப்பிரஷ்டம்' செய்தனர்

ரூ. 100 அபராதமும் கட்டுமாறு பஞ்சாயத்து தீர்ப்பு

போபால், மே. 17—

'கீழ் சாதி'க்காரர் ஒருவர் நடத்திய விருந்தொன்றில் கலந்துகொண்டதற்காக, காலுராம் என்ற பார்ப்பனரை, இங்குள்ள ஹாலியாசேரி எனும் கிராமத்துப் பார்ப்பனர்கள் 'சாதிப் பிரஷ்டம்' செய்து வைத்திருக்கின்றனர் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

அந்த கிராமத்தைச் சேர்ந்த க்ஷவரத் தொழிலாளர்களும், அந்த நபருக்கு வேலை செய்ய மறுத்து விட்டனராம்.

பிற சாதி விருந்தில் கலந்துகொண்ட காலுராம், கங்கை நதியில் நீராடி, தன்னை 'புனித'ப் படுத்திக் கொண்டாலன்றி மீண்டும் பார்ப்பன சாதியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார் என்று அவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

அவர், கங்கையில் நீராடி தன்னைப் புனிதப்படுத்திக் கொண்ட பின் நடத்த வேண்டிய விருந்து ஒன்றிற்காக ஆகும் செலவிற்காக ரூ. 100 அபராதம் கட்டவேண்டும் என்றும் கிராமப் பஞ்சாயத்து தண்டனையும் விதித்திருக்கிறது என்ற தகவலும் தரப்படுகிறது.

பதவியைத் துறக்க முதலமைச்சர் முடிவு

நிலதான இயக்கத்தில் சேருவதற்காகத் தமது முதலமைச்சர் பதவியை விரைவிலேயே துறந்துவிடப் போவதாக ஒரிசா மாநில முதலமைச்சர் நவகிருஷ்ண சௌத்ரி தெரிவித்திருக்கிறார்.

இந்த இயக்கத்தில் அவரது துணைவியாரும் சேரலாம் என்றும் கூறப்படுகிறது.

கூட்டுப் பரிகாரம்!

கராச்சி, மே. 19—

கொடிச் சம்பவம் பற்றி ஏற்பட்டுள்ள பாக் - ஆப்கன் தகராறில் ஒரு கூட்டுப் பரிகாரம் காண சவூதி அரேபியாவும், ஈராக்கும் இப்பொழுது முயற்சி செய்கின்றன.

எகிப்தில் மக்கள் சபை

கெய்ரோ, மே. 20—

எகிப்தில் வரும் 1956 ஜனவரியில் மக்கள் சபை ஒன்று அமையும் என்றும், ஆனாலும் எந்தவித அரசியல் கட்சிகளும் அமைக்கப்படாது என்றும் பிரதமர் கர்னல் நாசர் தெரிவித்திருக்கிறார்.

வாழத் தெரியாதவர்கள்!

மனைவிக்கும் — கணவனுக்கும் குடும்ப விஷயமாகத் தகராறு; சண்டை! அதை ஒட்டி, 'கணவனுடன் பேசுவதில்லை,' என்ற முடிவுக்கு வந்தார் மனைவி; மனைவியின் வாய்மொழி கேட்டு மகிழத் துடித்த கணவன், மனைவியைப் பேசவைக்க பன்முறை முயன்றிருக்கிறார்!

ஆனால், மனைவியின் 'மௌன விரதம்' நிலைகுலையாததினால் மனமுடைந்த கணவன் கடந்த புதன் அன்று தற்கொலை செய்துகொண்டதாக செய்தி ஒன்று வந்துள்ளது.

இந்தச் சம்பவம் பூனாவில் நடைபெற்றதாம்.

கான்பூரில் பொது வேலைநிறுத்தம்?

ஆலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்த எதிரொலி

அதிகாரிகள் தங்கள் கோரிக்கைகளுக்கு இணங்காவிட்டால், தொடர்ந்து உரிமைகள் பறிக்கப்பட்டால், நகரத்தில் உள்ள எல்லா தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட வேண்டும் என்று கான்பூரில் உள்ள 37 தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட மத்திய தொழிற் சங்க கவுன்சில் கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

நகரத்தில் உள்ள எல்லா தொழிற் சங்கங்களும், தொழிலாளர்களும் அத்தகைய ஒரு பொது வேலை நிறுத்தத்தைச் சந்திக்கத் தயாராயிருக்க வேண்டுமென்றும் அத்தீர்மானம் கேட்டுக் கொண்டுள்ளதாம்.

'கான்பூர் ஆலைத் தொழிலாளர் வாரம்,' என்று, மே. 22-ந் தேதி முதல் 29-ந் தேதிவரை கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.

போலி மருந்துகளை தடுக்க

போலி மருந்துகள் செய்வதையும் விற்பதையும் கண்டுபிடிக்கத் தனியாக ஒரு இரகசிய இலாகாவை பம்பாய் சர்க்கார் ஏற்படுத்தஇருப்பதாகத் தெரிகிறது.

தடை உத்தரவை மீறினர்!

330 தொண்டர்கள் கைது

அமிருதசரஸ், மே 19—

அமிருதசரசில் இன்று மீண்டும் 35 அகாலிதளத்தவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதுவரையிலும் மொத்தம் 330 அகாலிதளத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9 நாட்களாக, இங்கு நீடித்து அமுலிலிருக்கும் தடையுத்தரவை மீறி அகாலிதளத் தலைவர்களும், தொண்டர்களும் சத்தியாக்கிரகங்களும் கிளர்ச்சிகளும் நடத்தி வருவதும், முதல் நாளன்றே அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாராசிங், மற்றும் பல தலைவர்களும் கைது செய்யப்பட்டதும் அறிந்ததே.

பதனீர் இறக்க அனுமதி

சென்னை, மே 19—

சென்னை நகரத்திலுள்ள பனைமரங்களில் 'பதனீர்' இறக்கி, கோடைகாலத்தில் நகரில் பதனீர் வினியோகிக்க கண்டமநகரிலுள்ள பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சென்னை சர்க்கார் அனுமதி தந்துள்ளனர் எனத் தெரியவருகிறது. சென்ற ஆண்டிலும் இதே போலத்தான் பதனீர் வினியோகத்திற்கு அனுமதி தரப்பட்டது.

வேலைநிறுத்தம் சீர்குலைகிறது!

58 சதவிகிதத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிவிட்டனராம்!

கடந்த 19 நாட்களாக நடைபெற்றுவரும் கான்பூர் ஆலைத் தொழிலாளர் வேலை நிறுத்தம், ஒரு முடிவுக்கு வருவதற்கான ஏற்பாடுகளில் நம்பிக்கை தோன்றியிருப்பதாகத் தெரியவருகிறது.

வேலைக்குத் திரும்பும் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதே இந்த நம்பிக்கைக்கு அடிப்படையாம்.

சுமார் 58 சதவிகித தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் முதன் மந்திரி சம்பூர்ணானந்த் அவர்களைச் சந்திப்பதென கான்பூரில் உள்ள காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர்கள் முடிவு செய்திருக்கின்றனராம்.

நிலைமையைச் சமாளிப்பதில் அதிகாரிகள் நடந்துகொண்ட முறை பற்றி அந்த உறுப்பினர்கள் அதிருப்தியடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நகரத்திலுள்ள பிரபல தொழிற் சங்க வாதிகளில் 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரியவருகிறது.

வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் மீது திராவகம் வீசியதாக மூன்று சம்பவங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக போலீசார் கூறினர். கம்யூனிஸ்டு தலைவர் ஒருவரை போலீசார் பிடித்துக்கொண்டபோது அவர் கூச்சல் போட்டு, தனது சகாக்களை அழைத்து அவர்களின் உதவிகொண்டு போலீஸ் பிடியிலிருந்து விடுபட்டதாக தகவல் ஒன்றும் கிடைத்துள்ளது.

தோழர்களைக் கண்டதும் போலீஸ்காரர் பயந்து நடுங்கி கைது செய்த கம்யூனிஸ்டு தலைவரை விட்டுவிட்டு அந்த இடத்திலிருந்து தலைதெறிக்க ஓடிவிட்டாராம்.

அல்ஜீரியா விடுதலைக் கிளர்ச்சி

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் வழக்கமான நோக்கு!

பாரிஸ், மே. 19—

அல்ஜீரியாவில் தற்போது நடைபெற்றுவரும் கிளர்ச்சிகளை ஒடுக்க 19 காலாட்படைப் பட்டாளங்களும், ஒரு சாதாரண 'ரெஜிமெண்'டும், 2,000 போலீசாரும் அனுப்பப்படுவர் என்று பிரெஞ்சு சர்க்கார் அறிவித்திருக்கிறது.

டுனீசியாவைப் போல் அல்ஜீரியாவுக்கும் உள்நாட்டு சுயாட்சி அளிக்க சம்மதிக்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்றும் அல்ஜீரியா பிரான்சின் ஒரு பிரிக்க முடியாத பகுதி என்றும், அங்கு சுதந்திரத்திற்காகக் கிளர்ச்சி செய்வது புரட்சியாகவே கருதப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

துருப்புகள், போலீஸ்படைகள், விமானங்கள், கப்பற்படை முதலியன அல்ஜீரியாவிற்கு அனுப்பப்படுவதாக, பிரெஞ்சு பாதுகாப்பு உள்நாட்டு இலாகாக்கள் அறிவித்துள்ளன என்று தெரிகிறது.

ரஷ்யாவில் மூன்று துருக்கியர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்

வேவு பார்த்ததாகக் குற்றச்சாட்டு

மாஸ்கோ, மே. 19—

சோவியத் ரஷ்யாவில் வேவு பார்த்ததாக மூன்று துருக்கியர்கள் கைது செய்யப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனரென செய்திகள் கூறுகின்றன.

இந்த மூவரும் கைது செய்யப்படும்போது, அவர்களிடம், தானாகவே இயங்கும் சுழல் கைத் துப்பாக்கி, ஒரு அமெரிக்க செய்தி அனுப்பும் வானொலி, மற்றும் வேவு பார்த்தலுக்குரிய கருவிகள் முதலியன இருந்தன என்றும், அவை பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

இந்த மூவரும் முன்னாள் சோவியத் குடிமக்கள் என்றும் கூறப்பட்டது. அவர்கள்மீது தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டே அவர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

சோவியத்தில், கிரிமியா, டிரான்ஸ் காகசியா ஆகிய பகுதிகளில் உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் முறைகள் பற்றியும், மற்றும் இராணுவ, கடற்படை பற்றிய விபரங்கள் குறித்தும், தொழிலக அமைப்புகள் குறித்தும் வேவு பார்த்து வருவதற்காகத் துருக்கிய துப்பறியும் இலாகாவினால் அந்த மூவரும் சோவியத் ரஷ்யாவிற்கு அனுப்பப்பட்டனரெனக் கூறப்படுகிறது.

தவறான கேள்வித்தாள்கள் தரப்பட்டதன் விளைவு

பரீட்சை மண்டபத்திலேயே மாணவர்கள் 'காவல்' வைக்கப்பட்டனர்!

லாகூர், மே 18—

திங்கட்கிழமையன்று மாணவர்களுக்குத் தரப்பட வேண்டிய உருது 'ஹானர்ஸ்' பரீட்சைக்கான கேள்வித் தாள்களை இரண்டு நாள் முன்னதாக வேறொரு பரீட்சையின்போது அந்த மாணவர்களுக்கு தவறாகத் தந்துவிட்டமையால், இரண்டு நாட்களும் 5 மாணவர்கள், இரண்டு பரீட்சை மேற்பார்வையாளர்கள் முதலியோர் பரீட்சை மண்டபத்திலேயே தங்கியிருக்குமாறு காவல் வைக்கப்பட்டதாக செய்திஒன்று வெளிவந்துள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 20—5—'55 வெள்ளி

என்ன சொல்கிறர்கள் ?

" அரசாங்க உத்தியோகம் பெற இந்தி மொழியில் பரீட்சை எழுத வேண்டுமா? ஐயோ! என்ன அநியாயம்? கேட்பாரில்லையா ?

"வடநாட்டு இந்தி வெறியர்களுக்கு ஏன் இந்த அவசர புத்தி? இவ்வளவு சீக்கிரமாகவா அவர்களின் 'ஏக பாஷை பைத்தியம்' முற்ற வேண்டும்? என்ன இருக்கிறது இந்திக்கு அருகதை? ஆங்கிலத்தின் வளமுண்டா ?—இல்லை தமிழின் இனிமைதானுண்டா ; இலக்கியம் உண்டா? எதுவும் இல்லாத நிலையில் உள்ள இந்தியை ஏன் இப்படி அவசரப்பட்டுத் திணிக்கிறீர்கள் ?" என்றெல்லாம் கண்டனம் செய்ய முற்படும் போதும் ஆச்சாரியார் போன்ருர், 'அகில இந்திய உறவு' நீடிக்கவேண்டுமானல், இந்தி வெறியர்கள் தங்களின் அவசர புத்தியை மாற்றிக் கொள்ளவேண்டுமென்ற உபதேசத்தில் முடிப்பார். 'அகில இந்திய உறவு' பாதுகாக்கப் படவேண்டும் என்பதைக் காரணமாகக் காட்டி, இந்தி வெறியரைச் சாடுவார் ஆச்சாரியார்.

தமிழ் நாட்டுத் திருக்கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய முடியாமலிருப்பதற்குக் காரணமாகக் கூட இந்த 'அகில இந்திய உறவு' இருக்கிறதாகத் தென்னிந்திய அர்ச்சகர்கள் தீர்மானமே நிறைவேற்றியிருக்கிருர்கள்.

"தமிழில் அர்ச்சனை நடந்தால் இக்கோவில்கள் மட்டும் தனித்தியங்க வேண்டி வரும் ; அதனல் 'அகில இந்திய உறவு' பாதிக்கப்படும்; எனவே வடமொழியில்தான் அர்ச்சனை நடைபெற வேண்டும்" என்று தென்னிந்திய அர்ச்சக சங்கத்தார் தீர்மானித்திருப்பதும், 'அப்படி ஒன்றும் ஆகாது ; விரும்புவோருக்கு மட்டுமே கரும்புச் சாரும் தமிழிலும், விரும்பாதாருக்கு வழக்கம் போல வடமொழியிலும் அர்ச்சனை செய்யுங்கள் ; இதனல் 'அகில இந்திய உறவு' அற்றுப் போய்விடாது' என்று குன்றக்குடிகளார் உபதேசிப்பதையும் காண்கிருேம்.

சமீப காலமாக இந்த நாட்டில் பலர், இந்த 'அகில இந்திய உறவு', 'ஏக இந்திய ஒற்றுமை', 'இந்திய ஐக்கியம்' என்றெல்லாம் கூறி அவற்றைப் பாதுகாக்கத் தோள் தட்டி நிற்பதையும் நாடு கண்டுதான் வருகிறது.

'அகில இந்திய', 'ஏக இந்திய' ஒட்டு, உறவு, ஒற்றுமைகளைச் சீர்குலைப்பவர்கள் — பிரிவினைச் சக்தியினர், என்றெல்லாம் குற்றஞ் சாட்டப்படுகிற நாம, 'இந்தியா' வில் அரசியல் ரீதியான ஆதிக்க ஒருமைப் பாட்டைத் தவிர மக்களின் இதய பூர்வமான ஒற்றுமை—ஐக்கியம் இல்லை என்று ஆதாரபூர்வமாக நடைமுறையைச் சுட்டிக் காட்டி மறுத்து வந்திருக்கிருேம். என்ருலும், இல்லாத ஒன்றுமே இருக்க முடியாத 'இந்திய ஒற்றுமை'யைச் சீர்குலைப்பதாகவே விவாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், நாம், அடுக்கடுக்கான இடுக்கண்கள், இன்னல்கள், எதிர்ப்புகள், ஏசல் மொழிகள், தூற்றல்கள், தடியடி முதல் துப்பாக்கிக் குண்டு ஈருன அடக்குமுறை அம்புகள் அத்தனையையும் தாங்கிக்கொண்டு, 'இந்திய ஒற்றுமை'யை எந்த சிறு அளவுக்கு சீர்குலைக்கிருேமோ அந்த அளவைக்காட்டிலும் அதிகமாக 'இந்திய ஒற்றுமையைக் காப்போம்' என்று கூறி, அந்த ஒற்றுமை கீதத்தின் இனிமையில் தென்னுட்டவரை நினைவிழக்கச் செய்து சுரண்டிக் கொழுத்து வரும், வடநாட்டவர்கள்—'ஒற்றுமை உபதேசிகள்' தங்களின் நயவஞ்சக—ஓரவஞ்சகப் போக்கினல் 'இந்திய ஒற்றுமை'யைச் சீர்குலைத்து வருகின்றனர்.

'விவசாயப் பொருள்களின் விலை விழ்ந்தது, விவசாய அபிவிருத்தியால்' என்று அரசாங்கத்தவர் கூறினர்.

'எங்கள் உழைப்பின் விளைவாக விலை வீழ்ந்துவிட்டமையால், எங்கள் வாழ்வும் வீழ்ந்து படுகிறது' என்று கூவினர் விவசாயிகள்.

நெடுநாட்களுக்குப் பிறகு கண்விழித்த நாட்டின் நாயகர்கள், 'அஞ்சேல்! அரசாங்கம் ஆவன செய்யும்!' என்று அபயம் தந்தனர்.

ஆனல்...........?

வடநாட்டில் கோதுமையின் விலை வீழ்ந்தது—பெரும் அளவுக்கு.

தென்னுட்டிலும் அதே விழ்ச்சி, இந்த நாட்டு உற்பத்தியான அரிசியின் விலையையும் பாதித்தது.

'அகில இந்திய உறவு' முறியாதவண்ணம் பார்த்துக்கொள்வதில் அக்கரை காட்டும் ஆச்சாரியாரும் குன்றக்குடிகளாரும் இந்த விலை விழ்ச்சி பற்றி கருத்தைச் செலுத்தித்தானே இருப்பர் ?

உத்தர பிரதேசத்திலும், மத்திய பாரத்திலுமாக விலை விழ்ந்துவிட்ட கோதுமையை ஒரு நிர்ணய விலைக்கு வாங்கி சேகரித்து வைத்துக்கொள்வதற்காக, இந்தியப் பேரரசு—டெல்லி ஆட்சிப் பீடம், ஒரு கோடியே இருபது லட்சம் ரூபாய் இதுவரை செலவிட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. வடநாட்டில் விலை வீழ்ந்துவிட்ட கோதுமையைப் பயிரிட்ட விவசாயி மட்டும் தான் நஷ்டப்படக் கூடாது ; ஆனல் தென்னுட்டு விவசாயி பயிரிட்ட அரிசி விலை விழ்ந்துவிட்டதால் அவன்பட்ட நஷ்டத்தைப் பற்றி யார் கவலைப் பாட்டார்கள் ?

உத்திர பிரதேசத்திற்கும், மத்திய பாரத்திற்கும் உதவிக்கு ஓடிச் செல்லும் டெல்லி ஆட்சியாளர், சென்னைக்கு ஏன் ஓடி வரவில்லை? என்ன சொல்கிருர்கள் இதற்கு 'ஏக இந்தியா' வாதிகள் ?

அகில இந்திய உறவு நிலை நாட்டப்படுவதில் சொந்த இலாபமும், போலிப் பெருமையும் பெற எண்ணுபவர்கள், வேறேதேனும் காரணம் கூற முற்படலாம் ; ஆனல், டில்லியின் இந்த ஓரவஞ்சனைப் போக்கை இல்லையென்று மறுத்துவிடவாவது துணிவிருக்க வேண்டாமா ?

டெல்லியின் இந்தப் போக்கிற்கு, 'நயவஞ்சகம்—ஓரவஞ்சனை — ஏகாதிபத்திய எண்ணம்'—என்பதைத் தவிர, வேறெந்தப் பொருளுடைய சொல்லும் பொருந்தாது என்றே நாம் கருதுகிருேம்.

மாலடோவ் விலகுவாரா ?

சோவியத் ரஷ்யாவின் வெளி நாட்டமைச்சர் மாலடோவ், தமது பதவியினின்றும் விலகிக் கொள்வதற்கான 'ராஜதந்திர முறை' களை மேற்கொள்ளலாமென மேற்கத்திய நாடுகளின் பார்வையாளர்கள் கூறுகின்றனராம்.

மேற்கத்திய அயல்நாட்டமைச்சர்களுடன் மாலடோவ் பேசிக் கொண்டிருக்கையில், தமக்கு வயதாகிவிட்டதாகவும், அந்தப் பொறுப்பை வேறு இளைஞர் யாரிடமாவது ஒப்படைக்க வேண்டிய காலமாகிவிட்டதென்றும் குறிப்பிட்டிருக்கிருராம். இதிலிருந்து, அவர் பதவியைத் துறந்துவிடலாம் என யூகிக்கப்படுவதாகக் கூறப்படுகிறது

மாலடோவுக்கு இப்போது 65 வயதாகிறது. ஒரு ரஷ்யத் தலைவர், தமக்கு வயதாகிவிட்டது என்று கூறுவது இதுவே முதன்முறை என்று தெரிகிறது.

உறவு முறியுமா ?

கெய்ரோ, மே 17—

தற்போதைய ஈராக் சர்க்காருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் ஒரு இரகசிய வானெலி சம்மந்தமாக ஈராக்—எகிப்து நாடுகளிடையே கடுமையான குறிப்புகள் பரிமாறிக் கொள்ளப்பட்டனவெனத் தெரியவருகிறது.

இதன் விளைவு, இரு நாடுகளுக்குமிடையேயுள்ள உறவு நிலை துண்டிக்கப்படவேண்டிய கட்டத்தை அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

'மந்திரிசபையைக் கலைத்துவிடுக!'

பஞ்சாப் கவர்னரிடம் எதிர்க் கட்சியினர் வற்புறுத்தல்

சிம்லா, மே 16—

பஞ்சாபில் இப்போது அதிகாரத்திலமர்ந்திருக்கும் காங்கிரஸ் மந்திரி சபையைக் கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சி அமைய வழி கோலுமாறு சி. பி. என். சிங் என்ற பஞ்சாப் கவர்னரிடம், எதிர்க்கட்சியினர் தூது சென்று வற்புறுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

52,000 தொழிலாளர்

மருத்துவ வசதி பெறுவர் !

சென்னைப் பகுதிகளில் சர்க்கார் இன்ஷ்யூரன்ஸ் திட்டம் அமுலாகும்

சென்னை நகரிலும், சுற்றுப்புறங்களிலும் உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் 52,000 தொழிலாளர்கள் இன்னும் 3 அல்லது 4 திங்களுக்குள்ளாக சர்க்கார் ஊழியர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவார்களாம்

பின்னர், இந்த ஆண்டிலேயே இத்திட்டம், மற்றுமுள்ள பதினெரு தொழிற்சாலைப் பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமாம்.

இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காக, மருத்துவர்கள் தேர்ந்தெடுத்தல் போன்ற பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றனவாம். தொழிலாளர்களுக்கு மருத்துவ வசதியளிக்க 70 முதல் 100 மருத்துவர்கள் வரை சேர்க்கப்படுவார்களாம்.

இவ்வாறு சேர்த்துக் கொள்ளப் படுபவர்களின் விகிதம் ஆயிரம் தொழிலாளருக்கு ஒரு மருத்துவர் என்றிருக்குமாம் ; ஆயினும், ஒரு மருத்துவர், குறைந்த பட்சம் இவ்வளவு தொழிலாளர்களைக் கவனித்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ணயிக்கப்படவில்லை.

இத்திட்டத்தை முழுவதுமாக நிறைவேற்ற தற்போது சென்னை மாநிலத்திலுள்ள மருத்துவ மனைகளில் மருத்துவ வசதி போதுமான அளவில் இல்லை என்ற கருதப்படுகிறதாம் எனினும், தற்போது இருக்கிற வசதியைப் பயன்படுத்திக்கொண்டே திட்டம் நிறைவேற்றப்படும் என்று கூறப்படுகிறது.

பஞ்சாப் சட்டசபையில் உள்ள எதிர்க் கட்சியினரால், மந்திரி ஜகத் நாராயண் மீதுள்ள லஞ்சக் குற்றப் பட்டியல் தயாரிக்க நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான சேதர் நாத்ருஷகால் என்பவர், மற்றொரு சட்ட சபை உறுப்பினரான அப்துல்கனி என்பவரும் சென்று கவர்னரைச் சந்தித்து மேற்கண்டவாறு கூறியிருக்கின்றனர்.

மேலும் அவர்கள், சர்க்கார்மீது மக்களுக்கு நம்பிக்கை திரும்புவதற்கு, இந்த மந்திரி சபையைக் கலைத்து விடுவதைத் தவிர வேறு வழியில்லை என்றும் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

இப்போதுள்ள மந்திரி சபை கடைப்பிடித்து வரும் ஆத்திரமூட்டும் போக்கால், இந்து—சீக்கிய உறவுக்கு உலை வைத்திருக்கிறது என்றும் அவர் கூறி, சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது.

மந்திரி சபை விரிவாகாது

இந்தூர், மே 16—

மத்திய பாரத் முதல் மந்திரியான தாகர்மால் ஜெயின் என்பவர், தனது மந்திரி சபையை மாற்றவோ, விரிவாக்கவோ போவதில்லை என்று கூறியிருக்கிருர்

சில மந்திரிகளுக்கு ஒரு இலாகாப் பொறுப்பும் வேறு சிலருக்கு பல இலாகா பொறுப்புமாக மந்திரி சபையின் வேலைகள் பிரிந்திருப்பதை மட்டும் மாற்றியமைத்து, எல்லோருக்கும் சரிசமமான வேலை என்ற நிலையை ஏற்படுத்தப் போவதாக கூறப்படுகிறது.

கோல்பாரா மாவட்டம்

மேற்கு வங்க மாநிலத்துடன் இணைவதற்கு எதிர்ப்பு

தர்பி, மே 18—

அசாம் மாநிலத்தில் உள்ள கோல்பாரா மாவட்டத்தை மேற்கு வங்கத்துடன் இணைக்கவேண்டுமென்ற கோரிக்கையை தர்பி மாவட்ட காங்கிரஸ், புரட்சிகர சோஷலிஸ்டு கட்சி, இன்னும் சிறுபான்மையினரான முஸ்லீம்கள், பழங்குடி மக்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் கூடி, மாநில புனரமைப்புக் குழுவைச் சந்தித்து தங்கள் எதிர்ப்புகளைக் காட்டிக்கொண்டனர் என்று தெரிகிறது.

ஆனல் தர்பி நகர மக்கள் சங்கம் என்ற நிறுவனம் உட்பட ஆறு நிறுவனங்கள், கோல்பாரா மாவட்டம் எப்போதுமே மேற்கு வங்க மாநிலத்தின் பிரிக்க முடியாத பகுதி என்றும், எனவே அந்த மாவட்டத்தை மேற்கு வங்கத்துடன்தான் இணைக்க வேண்டும் என்றும் குழுவிடம் தெரிவித்தனர் என்றும் தெரியவருகிறது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம்

சென்னையின் பங்கு

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்ப்பதற்காக சென்னை சர்க்காரின் பற்பல இலாகாக்களும் திட்டங்கள் தயாரித்திருக்கின்றன இத் திட்டங்களுக்கான செலவு ரூ 300 கோடி ஆகும். இவைகள் இப்போது, சர்க்கார் அலுவலகத்தில் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

இந்திய சர்க்கார் மாநிலசர்க்கார்களுக்கு அளிக்கும்உதவிக்குதகுந்தாற் போல் இந்தத் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டியிருக்கும். எப்படியிருந்தாலும், திருத்தப்பட்ட திட்டத்தின் மதிப்பு ரூ. 200 கோடிக்குக் குறையாதென்று சர்க்கார் அதிகாரியொருவர் கூறினர்.

இலாகா அதிகாரிகள் தயாரித்துள்ள திட்டங்கள் பின்வருமாறு :—

பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் : ரூ. 20 கோடி.

போக்குவரத்து : ரூ. 12 முதல் 15 கோடி வரை.

விவசாயம் : ரூ. 15 கோடி.

நகர, கிராமாந்திர குடிதண்ணீர் விநியோகம் : ரூ. 15 கோடி

மின்சார அபிவிருத்தி : ரூ. 75 கோடி.

கைத்தொழில்கள் அபிவிருத்தி (குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்பட) : ரூ. 10 கோடி.

காடுகள் இலாகா : ரூ. 3 கோடி.

வைத்திய, சுகாதார வசதிகள் : ரூ. 20 கோடி.

மீதமுள்ள ரூ. 100 கோடி முதல் 150 கோடி வரையிலுள்ள தொகை, கல்வி, கூட்டுறவு, காட்டிலாகா, கால்நடை அபிவிருத்தி ஆகிய இலாகாக்களுக்கும் செலவழிக்கப்படும்.

சென்னை மாநிலத்தின் திட்டங்கள் ஜுனின் முடிவுக்குள் உருவாகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜுலை ஆரம்பத்தில் இறுதித் திட்டம் திட்டக் கமிஷனிடம் சமர்ப்பிக்கப்படும்.

கிராமங்களின் அபிவிருத்தியில் விசேட கவனம் செலுத்தப்படும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் மாநிலம் பூராவிலும் தேசீய சேவை விஸ்தரிப்பு அமுலாகியிருக்கும். சமுதாய நல அபிவிருத்தித் திட்ட பிரதேசங்களும் அதிகரிக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கும் ரூ 3 கோடி ஒதுக்கப்படும்.

நிதி வசதி சம்பந்தப்பட்ட வரையில், சென்னை மாநிலம் இனி மேற்கொண்டு வரிகள் விதிப்பது சாத்தியமாயிராதென்பது தெளிவாக்கப்படுகிறது. வரி விதிப்பு ஏற்கனவே அதிகமாயிருப்பதாகவும் கருதப்படுகிறது. ஆகவே, திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய சர்க்காரின் உதவியையே சென்னை பெரும்பாலும் நம்பியிருக்கும்.

தீப்பெட்டிகளுக்கு

இரயில்வே கட்டணக் குறைப்பு

சென்னை, மே 18—

குடிசைத் தொழில் அடிப்படையில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளுக்கு இரயில்வே கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்றும், தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் தீப்பெட்டிகளுக்கு வசூலிக்கப்படுவதற்கு அதிகமாக இரயில்வே கட்டணம் வசூலிக்கக் கூடாதென்றும் தென் இந்திய வர்த்தக சங்கத்தார் இரயில்வே அதிகாரிகளைத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்கிருர்கள்.

கழகச் செய்திகள்

தாரை வட்டார தி. மு. கழகக் குழுக் கூட்டம்

7-5-55-ல், மூலனூர் ரேடியோ நிலையக் கட்டிடத்தில், தாரை வட்டார தி. மு. கழக வட்டக் குழு, தோழர் வி. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றபோது, வட்டக் குழு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ந சின்னமுத்துசாமி; துணைச் செயலாளர்: எஸ். வி. சக்கரை; பொருளாளர்: எஸ். சிரங்கராயர்; மாவட்டப் பிரதிநிதி: சொம்ரசாமி; மற்றும் 7 பேர் செயற் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சேலம்-செவ்வாய்பேட்டை தி. மு. கழகம்

8—5—55 காலை 11 மணிக்கு, மேற்படி கிளைக் கழக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் எஸ் எ. சின்னப்பா இல்லத்தில், தோழர் பி. பி. பத்மனுபன் தலைமையில் நடைபெற்றபோது, கழகத்தின் கடந்தகால வரவு-செலவு கணக்குகள் சரிபார்த்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

குடியேற்றம் தி. மு. கழகம்

8—5—55-ல், தோழர் பெரியசாமி தலைமையில் நடைபெற்ற குடியேற்றம் நல்லூர்பேட்டை வட்டாரக் கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், மறுமலர்ச்சி மன்றப் படிப்பகம் ஒன்று அமைப்பதெனவும், விரைவில் அப்படிப்பகத்தின் திறப்பு விழா நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

புதுவையில் தி. மு. கழகக் கிளைகள் திறப்பு விழா

8—5—55 காலை 8, 10 மணிக்கும், மாலை 3-30 மணிக்கும் புதுவை தி மு. கழகக் கிளைகளான இலாசுப்பேட்டை தி. மு. க, முத்தால்பேட்டை தி. மு. க., திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் திறப்பு விழாக்கள், அவ்வக் கழகங்களின் செயலாளர்கள் தலைமையில் நடைபெற்றன. தோழர் வாணிதாசன் மூன்றிடங்களிலும் கொடியேற்றி வைத்தார்; தோழர் என். வி. நடராசன் கழகங்களைத் திறந்து வைத்தார்.

பெரியகுளம் தி. மு. க.

10—5—55 இரவு 10-30 மணிக்கு, கழக அலுவலகத்தில் தோழர் எம். கே. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், கிளைக் கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்கு முடிந்த அளவு தொகையை, பொது மக்களிடமிருந்தும், கழக உறுப்பினர்களிடமிருந்தும் வசூலித்துக் கொடுப்பதெனவும், 29—5—55-ல் ஒரு பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய்—மான்கூர்டு தி. மு. கழகம்

12—5—55 இரவு 8 மணியளவில், பம்பாய் தி. மு. கழக பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் கழகப் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: ப. செல்வராசு; துணைச் செயலாளர்: டி. டி. கே. பாசு; பொருளாளர்: வி. கோவிந்தசாமி. செயற் குழு உறுப்பினர்கள்: இராமச்சந்திசன், இராமு, மஜீத், சாமிக்கண்ணு, பி. என். நாராயணசாமி, வி. நாராயணசாமி, பழனிச்சாமி, சோட்டு. பொதுக் குழு உறுப்பினர்கள்: இராமு, இராமச்சந்திரன்.

திருத்தங்கல்லில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

12-5-55 இரவு 8 மணிக்கு பாண்டியன் பூங்காவில். தோழர் எஸ். வி. செண்பகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கே. வி. கே. சாமி, எம். காளியப்பன், இரா பொன் பாண்டியன், எ. சந்திரசேகரன், டி. கே. கரிகாலன் ஆகியோர் தற்கால அரசியல் நிலை பற்றிப் பேசினர். அண்ணு படிப்பகச் சார்பில் தோழர் கே. வி. கே. சாமிக்கு கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

வடசேரியில் தி. மு. கழக அமைப்பு

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வடசேரியில், 12—5—55 காலை 10 மணிக்கு, தோழர் அ. ம. மெய்யப்பன் தலைமையில் தி. மு. கழகம் அமைக்கப்பட்டது. கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பிள்ளாதுரை தி.மு.கழகம்

13—5—55 இரவு 7 மணியளவில், தோழர் பெ. முருகேசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 28—5—55-ல் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கடையநல்லூர் தி. மு. கழகம்

13—5—55 இரவு 8 மணியளவில், தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழு உறுப்பினர் கூட்டத்தில், மே தின விழாப் பொதுக்கூட்ட வரவு-செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், நெல்லை மாவட்டச் செயலாளரின் சுற்றறிக்கை படிக்கப்பட்டு அதன்படி பணியாற்றுவதெனவும், திராவிட கைத்தறி நெசவாளர் சங்க அமைப்புக் கூட்டம் கூட்டுமாறு அமைப்பாளர் தோழர் எஸ். எஸ். சாகுல் அமீது அவர்களைக் கேட்டுக்கொண்டும், சாயப்பிடி தொழிலாளர் சங்க அமைப்புக் கூட்டம் கூட்டுமாறு அமைப்பாளர் தோழர் மா. கிருட்டிணன் அவர்களைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நச்சலூரில் தி. மு. கழகத் துவக்க விழா

14—5—55 மாலை 6 மணிக்கு, திருச்சி—குளித்தலைத் தாலுகாவைச் சேர்ந்த நச்சலூர் எனும் கிராமத்தில் தி. மு. கழகக் கிளை துவக்கப்பட்டது. மாலை 6-30 மணிக்கு, வ. உ. சி. சதுக்கத்தில் பூ. சி போலன் தலைமையில் நடைபெற்ற துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் எம். எஸ். மணி, மீ. சு இளமுருகு-பொற்செல்வி, தி வீ. முத்துக் கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

கொத்தமங்கலம் தி. மு. க. ஆண்டு விழா

14—5—55 இரவு 7½ மணிக்கு கொத்தமங்கலம் தி மு. கழக ஆண்டுவிழாப் பொதுக் கூட்டம் அழகிரி அரங்கில், தோழர் ஏ. டி பதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிவகுருநாதன், அடைக்கலம், சிவானந்தம், மாணிக்கம், ராசன் ஆகியோர் பேசியபின், தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள், கழகக் கொள்கைகளை விளக்கி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர். விழாவையொட்டி சிறுர்களுக்குப் பாயசம் வழங்கப்பட்டது.

புது கும்மிடிபூண்டியில் கழகப் பிரச்சாரக் கூட்டம்

13—5—55 இரவு 8 மணியளவில் புதுகும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில், பன்பாக்கம் சிற்றூரில், தோழர் ஆ வீரைய்யா தலைமையில் கழகப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் ப. செ. தூயமணி, ஆ கிருஷ்ணன், ஏ. இராதாமணாளன், இசையரசு, திருமாவளன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

நாகையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

15—5—55 மாலை 6 மணிக்கு, நாகை அவுரித் திடலில், நாகை தி. மு. கழகச் சார்பில், தோழர் ஆர். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எஸ். கல்யாணம், ஏ. எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும், அகில இந்தியக் கட்சிகளின் நிலை பற்றியும், தி. மு. கழகத்தின் நிலை பற்றியும், திராவிடம் பிரியவேண்டியதின் அவசியம் பற்றியும் மிக விளக்கமாக நீண்டதோர் விளக்கவுரையாற்றினர்.

தோழர் சம்பத் அவர்களுக்கு, நாகை, நாகூர், சிக்கல், கோகூர், உத்தமசோழபுரம், கீவளூர், அய்யநல்லூர் கிளைக் கழகங்கள், வள்ளுவர் மன்றம், திரு. வி. க. படிப்பகம், இரயில்வே தொழிலாளர்கள், அழகிரி சொற் பயிற்சி மன்றம், பகுத்தறிவுப் படிப்பகம், மலர்த் தோட்டக்காரர்கள் ஆகியோரின் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பின்னர், நாகை சர்க்கார் மருத்துவ மனையில் நல்ல முறையில் பணியாற்றிவந்த டாக்டர் சீனிவாசன் அவர்களை அங்கிருந்து மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டவர்களை வன்மையாகக் கண்டித்தும், டாக்டர் சீனிவாசனை வெளியூருக்கு மாற்றுமல் அவ்வூரிலேயே தொடர்ந்து பணியாற்றும் வாய்ப்பினை ஏறபடுத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

நீரவி தி. மு. கழகச் சார்பில் மலர் மாலையும், 'நம் நாடு' வளர்ச்சி நிதிக்கென ரூ 1-ம், வள்ளுவர் மன்றத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்கென ரூ. 1-ம் தோழர் சம்பத் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

கழகக் கட்டிடமும், நகரின் முக்கிய வீதிகளும் கழகக் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

செய்திச் சுருள்

முத்துகிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றம்

6—5—55 இரவு 8 மணிக்கு நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் சி. நடராசன் முன்னிலையிலும், தோழர் எஸ். எஸ். சாகுல் அமீது தலைமையிலும் மேற்படி மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெற்றது.

செயலாளர்: சு. இராமநாதன்; துணைச் செயலாளர்: ச. குருசாமி; பொருளாளர்: எஸ். ஆறுமுகம். செயற்குழு உறுப்பினர்கள்: மு. வேலன், பூ. சுப்பையா, ச. வேலு, மா. சுப்பையா, வே. பழனிச்சாமி, மு. க. சங்கரன், உ. குருநாதன், செ. சிந்தாமணி, க. பிச்சை, மூக்கையா, இரா. பிச்சுமணி, எஸ். மத்தும்.

பாரதிதாசன் இளைஞர் கழகம்

15—5—55 காலை 9½ மணிக்கு சென்னை, பெத்து நாய்க்கன் பேட்டை, கிருட்டிணப்பநாய்க்கன் குளத்து வீதியிலுள்ள மேற்படி கழக நிர்வாகிகள் தேர்தல் சிவஞானம் பூங்காவில் நடைபெற்றது. தலைவர்: த. சி. நந்தம்; செயலாளர்: பூ. கபாலீசுவரன்; துணைச் செயலாளர்: என் யு. பதி; பொருப்பாளர்: ஏ. வி. ஆசைத்தம்பி. பின்னர் வாரந்தோறும் புதனன்று மாலை சொற்பயிற்சியும் நினைவுநாள் கூட்டங்களும் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இளைஞர் திருவள்ளுவர் கழகம்

13—5—55 மாலை 6 மணிக்கு, புதியம்புத்தூரில் மேற்படி கழகத் திறப்பு விழா தோழர் ப. பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வே. அற்புதராசன், பி. காசிலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர் பின்னர் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இலக்கியச் சொற்பொழிவு

புதுக்கோட்டை திருக்குறள் கழகச் சார்பில், 15—5—55 மாலை 6-30 மணிக்கு, இலக்கியச் சொற்பொழிவு நடைபெற்றது. ஔவை சு. துரைசாமி 'வள்ளுவர் கண்ட தமிழகம்' எனும் பொருள் பற்றி உரையாற்றுகையில், பண்டைத் தமிழகத்தில் இருந்த தமிழர் குடும்பம், தமிழர் அரசு, தமிழர் வாணிபம், தமிழ் சமயம், தமிழர் நற்பண்பு ஆகியவைகள் பற்றி குறிப்பிட்டார். ஆங்கில மொழி அறிவு தற்கால உலகுக்கு மிக மிக அவசிய மாகுமென்று வலியுறுத்தினர்.

திருமங்கலம் தி. மு. கழகத் தோழர்கள் சாதனை

திருமங்கலம் தி. மு. கழகத் தோழர்கள் பி. எம். இராசு, எம். நவநீதம் ஆகிய இருவரும் 10-5-55 காலை 5 மணிக்கு, திருமங்கலத்தை விட்டுப் புறப்பட்டு, விருதுநகர், சாத்தூர், கோயில்பட்டி வழியாக மாலை 5 மணிக்கு திருநெல்வேலியை அடைந்து, மறுநாள் காலை 7 மணிக்கு புறப்பட்டு பகல் 11½ மணிக்கு கன்னியாகுமரியை அடைந்து, மறுநாள் காலை 9 மணிக்கு புறப்பட்டு மாலை 4-30 மணிக்கு திருவனந்தபுரம் வந்து அங்கு தங்கி, 13-ந் தேதி மாலை 3 மணிக்கு புறப்பட்டு கொட்டாரக்கரை வழியாக கொல்லம் சேர்ந்து, மறுநாள் செங்கோட்டை, திருக்குற்றாலம், தென்காசி, புளியங்குடி, சேத்தூர், இராசபாளையம், கல்லுப்பட்டி வழியாக 15-ந் தேதி திருமங்கலம் வந்தடைந்தனர். தோழர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. 6 நாட்களில் 500 மைல் சுற்றுப் பிரயாணத்தை வெற்றியுடன் முடித்துத் திரும்பினர். தாங்கள் சென்ற அந்தந்த ஊர்களின் பிரமுகர்களிடமும் தலைவர்களிடமும் அத்தாட்சிப் பத்திரங்கள் பெற்றிருக்கின்றனர்.

'வால்மீகி இராமாயணம்'—நாடகம்

24—4—55ல் திருமணி (வ.ஆ.) தி. மு. கழக நாடகக் குழுவினரால் 'வால்மீகி இராமாயணம்' என்னும் நாடகம், அரங்கசாமி தலைமையில், ஆரணி தி. மு. கழகச் செயலாளர் தோழர் கண்ணன் உதவியுடன் நடைபெற்றது. தோழர் பி. டி. சுப்பிரமணியம் இராமாயணத்தைப் பற்றி எடுத்துக் கூறினர்.

'ஜமீன்தாரின் பணத் — திமிர்' — நாடகம்

நிலக்கோட்டை குருசாமி கோவில் முன்பாக, தோழர் இ. காத்தான் தலைமையில், கலைஞர் நாடக மன்றம் உட்பட தி. மு. கழகத் தோழர்களால், 15—5—55 - இரவு 10-30 மணிக்கு, 'ஜமீன்தாரின் பணத் திமிர்' — நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்கு திரளான மக்கள் வந்திருந்தனர்.

நாடக முடிவில், தலைவர், நாடகத்தை நடித்த இளைஞர்களைப் பாராட்டியும், தி. மு. கழகப் பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியனைத் தேர்ந்தெடுத்த பொதுக் குழுவினரைப் பாராட்டியும் பேசினர்.

'வீர சிவாஜி' — நாடகம்

உடுமலை திராவிட மாணவர் முன்னேற்றக் கழகச் சார்பில், 15—5—55 இரவு, பிரேமா டாக்கீசில், பழனி அடிகளார் சிவநேசம் தலைமையில், 'வீர சிவாஜி'—நாடகம் நடைபெற்றது. நாடகத்திற்கு திரளான மக்கள் வந்திருந்தனர். தோழர் வி. நாராயணன் நாடகத்தின் சிறப்பு குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

திருமணங்கள்

15—5—55 காலை 9 மணியளவில் சென்னை குளை தோழர் வீரராகவன்—தோழியர் புவனேசுவரி அம்மையார் திருமணம் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழர்கள் என். வி. மதிவண்ணன், முசவை-ஆர். எஸ், பாண்டியன், ஆடலழகன், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் ஆகியோர் பேசினர்.

* * *

16—5—55 மாலை 6½ மணிக்கு, பெங்களூர் சிராமபுரம் தோழர் பெரியசாமி—தோழியர் சு. கண்ணம்மா திருமணம் தோழர் ஏ. டி. பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

பாட்டாளிகளின் சுவர்க்க பூமியில்!

தொழிலாளர்கள் 'போக்கு' பற்றி பிரதமர் புல்கானின்

ரஷ்ய கனரகத் தொழில் குறைபாடுகளைக் கண்டித்து சோவியத் பிரதமர் புல்கானின் உரை ஆற்றுகையில், பொருளாதார திட்ட அமைப்பில், தலைமையில் உள்ளவர்களை மாற்றியமைக்க உத்தேசித்துள்ள திட்டத்தையும், அநேக தொழிலாளர்களிடையே கவலையின்மை, தற்பெருமை மனேபாவம் நிலவுவதையும், குறிப்பிட்டார்.

தொழிலாளர்கள் தொழில், நிபுணர்கள் அகில யூனியன் மாநாட்டில் சோவியத் பிரதமர் புல்கானின் உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது:—

"அனேக தொழிலாளர்கள் பொறுப்பு உணர்ச்சியை இழந்து விட்டனர். தொழில் கொள்கையிலும் நேர்மையான கண்ணேட்டம் அவர்களிடம் இல்லை. உலோக, ரசாயன தொழிற்சாலைகள் உலகின் இதர பகுதிகளில் உள்ளவைகளைக் காட்டிலும் உற்பத்தித் துறையில் பின்தங்கிவிட்டன.

"எண்ணெய், நிலக்கரி, மரம், இதர தொழில்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன. அனேக தொழில் நிறுவனங்கள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டன.

"தொழிலில் நவீன முறைகளைப் பின்பற்ற வேண்டும். தொழிற்சாலைகளை நடத்துவதில் அதிகாரம் செலுத்தும் போக்கை அகற்றி, அதிகமாக நுணுக்கங்களை அறிந்து, சிறந்த கூட்டு உணர்ச்சியுடன் செயல்பட வகைகாண வேண்டும்."

"தொழில்அபிவிருத்திக்காகஇரு கமிஷன்கள் நிறுவப்படும்; ஒன்று, நடப்பு திட்டங்களைப்பற்றி கவனம் செலுத்தும்; மற்றொன்று, எதிர்கால திட்டங்களைக் கவனிக்கும். இத்துறையில் உள்ள இலாகாக்களின் வேலைகளை ஒன்றுபடுத்த புதிய முறையைக் கையாளுவதற்கான சர்க்கார் குழு ஒன்று நிறுவ முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது. இதர நடவடிக்கைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன

ரூ. 10 லட்சம் மோசடி வழக்கு துலங்குகிறது?

கல்கத்தா போலீஸ், கல்கத்தா நகரத்தின் மத்திய பகுதியில் பல வீடுகளை ஒரே நேரத்தில் சோதனையிட்டதின் விளைவாக, ரூ 80,000 ரொக்கமும், பல தங்கக் கட்டிகளும், சவரன்களும், சில மட்ட உலோகங்களும் கைப்பற்றப்பட்டது. இது சமீபத்தில் நடைபெற்ற 10 லட்ச ரூபாய் மோசடி வழக்கு சம்பந்தப்பட்டவைகளாகக் கருதப்படுகிறது.

இது சம்பந்தமாக இதுவரை தங்க வியாபாரி ஒருவர் உட்பட பத்து பேர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

விஷக் காற்றின் விபரீத விளைவு

ஏழு பேரை பலி கொண்டது

பூரி, மே 19—

இங்குள்ள ஒரு பாழுங்கிணற்றை சுத்தம் செய்யும் நோக்குடன், கிணற்றிற்குள் இறங்கிய ஏழுபேர், கிணற்று நீரில் கலந்துள்ள விஷக் காற்றின் காரணமாக பரிதாபகரமான நிலையில் உயிர் துறந்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவம், பூரிக்கு அருகில் உள்ள கல்யாண்பூர் எனுமிடத்தில் நடைபெற்றிருப்பதாகச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

முதலில் கிணற்றுக்குள் இறங்கியவர் திரும்பிவராததைக் கண்டு, அவரை மீட்க மற்றொருவர் கிணற்றுக்குள் இறங்கியதாகவும், அவரும் கிணற்றுக்குள் இறங்கிய பின்னர் திரும்பி வராமையால் மற்றொருவர் இறங்கியதாகவும், இவ்வாறே அந்த ஏழுபேரும் கிணற்றிற்குள் இறங்கி உயிர் துறந்தனர் என்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை

வருகிற ஜூன் திங்கள் மூன்றுவது வாரத்திலாவது, அல்லது இறுதி வாரத்திலாவது பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது, பாக். புதிய அரசியல் நிர்ணயசபையைக் கூட்ட இருக்கிறாராம்.

தவறான கேள்வித்தாள்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பரீட்சை நடத்தும் அதிகாரி, திங்கட்கிழமைப் பரீட்சைக்குத் தர வேண்டிய கேள்வித் தாள்களை சனிக்கிழமை கேள்வித்தாள்களெனத் தவறாக நினைத்து சீலிடப்பட்ட முத்திரையை உடைத்துப் பிரித்து மாணவர்களுக்குத் தந்திருக்கிறார்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தவறு உணரப்பட்டு, அந்தக் கேள்வித் தாள்கள், மாணவர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்டு சனிக்கிழமைக்குரிய கேள்வித் தாள்கள் தரப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டதாம்.

மாணவர்கள் வெளியே சென்று மீண்டும் திங்களன்று பரீட்சைக்கு வந்து தாங்கள் ஏற்கனவே பார்த்துவிட்ட கேள்வித்தாளுக்கு விடையளிப்பது முறையல்ல என்று கருதி, 5 மாணவர்களையும், இரு மேற்பார்வையாளர்களையும் பரீட்சை மண்டபத்திலேயே 'காவல்' வைத்திருக்கிறார்கள்.

இந்தச் சம்பவம் மாண்ட்கோமரி எனுமிடத்தில் நடைபெற்றதாம்.

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

தம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

ஒரு மாணவர், தங்களை வெளியேற்ற உபயோகிக்கப்படும் எந்த ஒரு பலாத்காரச் செய்கையையும் எதிர்த்து முறியடிக்கத் தயாராயிருப்பதாகக் கூறியதாகவும் தெரிய வந்துள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை (சூளை)

தி. மு. கழக 5-வது ஆண்டு விழா கலியாணமேஸ்திரி தோட்டத்தில் 21— —55 மாலை 6 மணிக்கு

தலைவர்: சத்தியவாணிமுத்து

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு
இளம்பரிதி
இரா. தென்னவன்

குறிப்பு:—சென்னை மாவட்ட தி. மு. கழக புதிய செயலாளருக்கு பாராட்டுரை வழங்கப்படும்.

★

பொள்ளாச்சி

தேர்நிலைத் திடலில்

22—5—55 மாலை 7 மணிக்கு

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்
கோவை-செழியன்
ஜே. பி. ஜெபக்கனி
பி. கே. முத்து

★

நெடுங்காடு (காரைக்கால்)

கிராமத்தில்

தி. மு. கழக துவக்க விழா

22—5—55 மாலை 5 மணிக்கு

பேசுபவர்:

காஞ்சி கல்யாணசுந்தரம்

★

திருப்பத்தூர் (வ. ஆ.)

வாரச்சந்தை மைதானத்தில்

22—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:

வி. பி. இராசாபாதர் எம்.சி.

பேசுபவர்:

க. அன்பழகன்

★

உடுமலைப்பேட்டை

பிரேவோ திடலில்

22—5—55 ஞாயிறு மாலை

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்
ப. நாராயணன்

சென்னை 35-வது வட்ட தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

22—5—55 காலை 8½ மணிக்கு சென்னை 35-வது வட்ட தி மு கழகச் செயற் குழு கூடும். அது போது, ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு பரிசீலனைக்கு வரும்.

குடந்தை நகர தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

22—5—55 காலை 10 மணிக்கு, குடந்தை நகர தி. மு. கழக செயற் குழுக் கூட்டம், கும்பேஸ்வரன் தெற்கு வீதி, பன்னீர்செல்வம் வாசகசாலையில் நடைபெறும். அது போது, பொதுச்செயலாளருக்கு வரவேற்பு, மாநில மாநாடு நிதி ஆகியவை பற்றி யோசிக்கப்படும்.

மே விழா

22—5—55 மாலை, கலையம்புத்தூர் அண்ணா திடலில், தோழர் பரிமளம் தலைமையில் நடைபெறும். தோழர் எம். எஸ். இராமசாமி பேசுவார்.

நல்வார்பட்டி சௌந்திரபாண்டியனார் படிப்பகத் திறப்பு விழா

22—5—55 மாலை 5 மணிக்கு, கல்வார்பட்டியில், திரு. ஆ. ராசாக் கவுண்டர் தலைமையில், திரு எம் ஆர். மத்திரன் மேற்படி படிப்பகத்தைத் திறந்துவைப்பார். அது சமயம், படிப்பகத்தில் சௌந்திரபாண்டியனார் படம் திறந்து வைக்கப்படும். திருவாளர்கள் க. கருப்பண கவுண்டர், எஸ். பாலசுப்ரமணியம், சி. பி. இராமசாமி, என் முத்து, இரா. இராமலிங்கம் ஆகியோர் பங்குகொள்வர். மாலை 4 மணிக்கு, காசிபாளையம் பிரிவு பாதையிலிருந்து (ரோடில்) மேளதாள வாத்தியங்களுடன் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு ஆண்டு விழாப் பந்தலை அடையும்.

அண்ணாதுரை படத் திறப்பு விழா

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் தலைமை தாங்குவார்

"23—5—55 மாலை 4 மணி அளவில், ஓமலூர் ஊராட்சி மன்றத்தில், தி. மு. கழக முன்னாள் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்களின் உருவப் படத் திறப்பு விழா நடைபெறும்.

"தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

"தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அண்ணாதுரை அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைப்பார்,"

என, ஓமலூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு. ஆர். குப்புசாமி அவர்கள் அறிவிக்கிறார்.

திருச்சி மாவட்ட தி.மு. கழக செயற்குழு கூட்ட அழைப்பு

"22-5-55 காலை 10 மணிக்கு, திருச்சி சிந்தாமணி தி. மு. க. அலுவலகத்தில், மாவட்டச் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பொதுச் செயலாளர் வரவேற்பு, மாநில மாநாட்டு நிதி வசூல், வட்டக் குழு அமைத்தல் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும். செயற் குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வர வேண்டுகிறேன்,"

என செயலாளர் ஆ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

தாளமுத்து நடராசன் நினைவுப் படிப்பக 10-வது ஆண்டு விழா

22—5—55 மாலை 5 மணிக்கு, மதுரை, நாடார் வித்தியாசாலைத் தெருவில், மேற்படி படிப்பகத்தின் 10-வது ஆண்டு விழா, தோழர் பி. மாடசாமி தலைமையில் நடைபெறும். தோழர்கள் எஸ் முத்து, கே. எஸ். சந்தானம், என். எஸ். இராசா, தோழியர் அருண்மொழி ஆகியோர் பேசுவர்.

சென்னையில் சிறப்புக் கூட்டம்

அண்ணாதுரை கலந்துகொள்வார்

"மாநில மாநாட்டு நிதிக்காக, 24—5—55 செவ்வாய் மாலை 6 மணிக்கு, சென்னை கோகலே மண்டபத்தில் நடக்கவிருக்கும் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் கலந்துகொள்வதாயிருந்த தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தவிர்க்க முடியாத காரணங்களால் கலந்து கொள்ள இயலாமையால், அன்று தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்;

"தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்;

"தோழர்கள், மாநில மாநாட்டு நிதிக் கூட்டத்தைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

க. அன்பழகன் சுற்றுப்பயணம்

மே 22: திருப்பத்தூர் (வ. ஆ.)
23: நங்கவள்ளி (சேலம்)
25: பொத்தனூர் ,,
26: கலங்காணி (திருமணம்)
28: பாபநாசம்
29: கும்பகோணம்
31: பாக்கிப்பேட்டை

★★★★★★★★★★★★★★★★★

ஒவ்வொரு திராவிடரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்!

ஆசிரியர் 'விவேகி' எழுதிய

'நரகத்தில் நாயன்'

ஆராய்ச்சிமிக்க புரட்சிகரமான நாவல்

விலை ரூ. 1—8—0

[வியாபாரிகளுக்கு 25% கழிவும், வி. பி. பி செலவும் இனாம்]

திராவிட கலா நிலையம், 57, முத்தநருவிலா பேகம் தெரு, சென்னை—2

★★★★★★★★★★★★★★★★★

ஐ. சி. எஸ். அய்யர் ஜாமீனில் விடுதலை

புதுடில்லி, மே 19—

பஞ்சாப் உயர் நீதி மன்றத்தால் இரண்டாண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் ஐ சி. எஸ் அதிகாரியான எஸ். ஏ. வெங்கட்ராமன், தமக்குத் தரப்பட்ட தண்டனையை எதிர்த்து இந்தியத் தலைமை உயர் நீதி மன்றத்திற்குச் செய்துகொண்டதை யொட்டி, [அவரது மனு பைசலாகும் வரையில் ரூ 10,000-த்திற்கான ஜாமீனில் விடுதலை செய்யுமாறு தலைமை உயர் நீதி மன்றத்தின் விடுமுறை கால நீதிபதியான ஏ. எல் வெங்கட்ராமய்யர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அவருடைய அப்பீல் மனு வருகிற ஆகஸ்டு மாதம், தலைமை உயர் நீதிமன்றம் திறந்தவுடன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

ஏழாயிரம் மாணவர்களின் உள்ளிருப்பு வேலை நிறுத்தம்

சீனப் பள்ளிகளின் நிலை பற்றி ஆராய சிங்கப்பூர் சர்க்கார் குழு நியமிக்கிறது

சீனப் பள்ளிகளின் நிலை குறித்து ஆராய்ந்தறிவதற்காக, சட்ட சபையில் உள்ள சகல கட்சிகளையும் கொண்ட குழு ஒன்றை நியமிக்கப் போவதாக சர்க்கார் அறிவித்திருக்கிறது. சீனக் கலாச்சார அபிவிருத்திக்கான சிபாரிசுகளைச் செய்யும் பொருட்டு, குழு விசாரணை நடத்தும்.

சிங்கப்பூரில் சுயாட்சிக்காக படிப்படியான முன்னேற்றத்தையும், முடிவில் பூரண சுதந்திர நிலையையும் அடைய வேண்டும் என்ற ஏற்பாட்டிற்கு ஒப்ப, குழு, தனது சிபாரிசுகளைச் செய்யும் என்று தெரிய வருகிறது.

கடந்த வாரம் சிங்கப்பூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றதாக சீன மாணவர்கள் கண்டுபிடிக்கப்பட்டதால், 5 நாட்களுக்கு முன், கல்வி மந்திரியான ஷா ஸ்வீகி என்பவர், சீனப் பள்ளிகளை எல்லாம் மூடிவிட உத்தரவிட்டிருந்தார்; பின்னர், மீண்டும் பள்ளிகளைத் திறப்பதற்கு அனுமதித்திருக்கிறார்.

உயர்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஏழாயிரம் சீன மாணவர்கள், தங்கள் பள்ளிகளை நிபந்தனை ஏதுமின்றி திறப்பதற்குச் சம்மதித்தாலன்றி பள்ளிகளுக்குச் செல்ல முடியாதென மறுத்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

சில பள்ளிகள், 'ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்ற மாணவர்கள் பலர் நீக்கப்பட்டனர்,' என்ற அறிவிப்புடன் திறக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

மாணவர்களில் பலர், பள்ளிக்கும் செல்லாமல், பள்ளி வாயிலை விட்டும் அகலாமல் இருந்ததாகவும், ஒரு பள்ளியில் சுமார் 600 மாணவர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க

அறப்போர் வீரர்களை வீழ்த்த அகழி வெட்டும் ஆதிபத்தியம்!

வாப்பி, மே. 19—

போர்த்துக்கீசிய இராணுவத்தினால் டாமன் எல்லைக் நட்புறம் இரண்டு வரிசை அகழிகள் வெட்டப்பட்டுள்ளனவாம். அறப்போர் வீரர்களைக் கைது செய்வதற்கு அநுகூலமாக இருப்பதற்காகவே இவைகள் வெட்டப்பட்டுள்ளன எனக் கருதப்படுகிறது.

கோவா பிரதேசத்தில் போர்ச்சுகீசிய சர்க்காரின் வெறியாட்டங்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. போர்ச்சுகீசிய இராணுவத்தினர் மிருகத்தனமான செயல்களில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

பாஞ்சம் எனும் இடத்தில், கையில் பிடித்துக்கொண்டிருந்த இந்திய தேசியக் கொடியைக் கைவிட மறுத்த கோவா தேசிய காங்கிரசைச் சேர்ந்த இரண்டு தொண்டர்களை, அவர்கள் மயக்கமுற்று கீழே விழும்வரையிலும் போர்ச்சுகீசிய அதிகாரிகள் கழி கொண்டு அடித்தனர் என்று செய்தி ஒன்றின் மூலம் தெரிய வருகிறது. மேலும் 11 தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

இதுவரையிலும் 28 சத்தியாக்கிரகிகள் விடுதலை பெற்று கோவா எல்லையைக் கடந்து இந்தியாவிற்குள் வந்திருக்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர், யுத்த முனைகளிலிருந்து திரும்பி வருபவர்களைப்போல் உடலெங்கும் இரத்தக்கறை படிந்தும், உடம்பின் பல இடங்களிலிருந்தும் இரத்தம் ஒழுகிக்கொண்டும் காணப்பட்டனர்.

கோரேயையும், சேனாபதி பாபட்டையும் போர்ச்சுகீசிய அதிகாரிகள் நடத்திய முறைபற்றி மக்கள் மனக்கொதிப்புற்றிருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கோரே பலமாகத் தாக்கப்பட்டு கையப் புடைக்கப்பட்டதால் மிகத் துன்புறுவதாகவும், போர்ச்சுகீசிய போலீசார் சேனாபதி பாபட்டின் குடுமி மயிரைப் பிய்த்தெறிந்ததால் அவர் தலையினின்றும் இரத்தம் ஒழுகிக்கொண்டிருப்பதாகவும், அவருக்கும் பலமான அடி கிடைத்துள்ளதாகவும், விடுதலை பெற்று இந்திய எல்லைக்குள் நுழைந்த சத்தியாக்கிரகிகள் தெரிவித்திருக்கின்றனர். அவர்களிருவருக்கும் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக அவர்களை, போர்ச்சுகீசிய அதிகாரிகள் கொண்டுபோய்விட்டதாக கோவா காங்கிரஸ் காரியாலயத்தின் அறிவிப்பொன்று தெரிவிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.